IA.136-2022 in O.S.No.39-2020

எ,ம,சா.1 ,  திரு. முகமதுநசீப்
நாள் : 28.11.2023  நேரம் :  12.30 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1)நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். கீரனூர் ஊராட்சிமன்ற தலைவராக 5 வருடம் இருந்தேன்.  இவ்வழக்கில் மனுதாரர் என்ன வழக்கு  தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு  தெரியும்.  இவ்வழக்கின் இடைக்கால மனு  எண் 135/2022 மனுவானது மனுதாரக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும்.  அந்த மனு நானோ எனது வகையறாக்களோ  மனுதாருக்கு  எந்தவிதமான தடை ஏதும் ஏற்படுத்தக்கூடாது என்பதற்கு  உத்தரவிடப்பட்டதாகும்.

2) தாவா சொத்தின் சர்வே எண்.312/2 ஐ எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பாக கிரையம் வாங்கினேன், எந்த தேதி என்பது எனக்கு நினைவில் இல்லை.  தாவா சொத்துக்களை தற்போது மனுதாரர் அனுபவித்து வருகிறார்.  நான் மனுதாரருக்கு உழவடைக்கு கொடுத்துள்ளேன்.

3) இந்த வழக்கு நடக்கும்போதே நான் கிரையம் பெற்று மனுதாரரின் அனுபவத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நான் நடந்துள்ளதால் நீதிமன்ற அவமதிப்பிற்கு உள்ளாகியுள்ளேன் என்றால் சரியல்ல.  நான் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர் இல்லை என்பதால் தான் இந்த மாதிரி நடந்து கொள்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு ஏற்படுத்தியதால் நான் இந்த மனுவின்படி தண்டிக்கப்படுபவர் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.40 P.M